ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1843/8 - 2013 දෙසැම්බර් මස 30 වැනි සඳුදා - 2013.12.30
*1843/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### நாணய விதிச் சட்டம்

*நாணய விதிச் சட்டம், (அத்தியாயம் 422) பிரிவு 32 உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*தலைவர்,*
*நாணயச் சபை.*

*இலங்கை மத்திய வங்கி,*
*கொழும்பு,*
*2013, திசெம்பர் 23.*

**இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள்**
**2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட**
**ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்**

*1. எடுத்துக்காட்டல்*

*1.1* இந்த ஒழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

*2.மூல ஒழுங்கு விதியில் திருத்தங்கள்*

*2.1* 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 1673/11 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*2.2* ஒழுங்குவிதி 3.1 இல் “இந்தத் திட்டம் இலங்கைக் காப்புறுதித் திட்டம் எனப் பெயரிடப்படும்” எனும் சொற்களுக்குப் பதிலீடாக “இந்தத் திட்டம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் எனப் பெயரிடப்படும் (இதனகத்துப்பின்னர் இது “இத்திட்டம்” எனக் குறிப்பிடப்படும்).”

*2.3* ஒழுங்குவிதி 7. 1 இல் “இத் திட்டமானது “வைப்புக் காப்புறுதி நிதியம்” எனும் பெயரைக் கொண்ட நிதி ஒன்றைக் கொண்டிருக்கும்” எனும் சொற்களுக்குப் பதிலீடாக “இத் திட்டமானது “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத் தன்மை உதவி நிதியம்” எனும் பெயரைக் கொண்ட நிதி ஒன்றைக் கொண்டிருக்கும்” என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

*2.4* ஒழுங்குவிதி 9.7 இல் "வைப்புக் காப்புறுதி நிதியம்" எனும் சொற்களுக்குப் பதிலீடாக இச் சொற்கள் ஒழுங்குவிதியில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத் தன்மை உதவி நிதியம்" என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

*2.5* ஒழுங்குவிதி 10. 5 இல் "இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்" எனும் சொற்களுக்குப் பதிலீடாக இச்சொற்கள் ஒழுங்குவிதியில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்" என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

3. நடைமுறைக்கு வரும் திகதி

*3.1* இந்தத் திருத்தங்கள் 2013, நவெம்பர் 22 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

*1- 417*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.